இந்தியா
ஆஸ்திரேலியா
வர்த்தக
ஒப்பந்தத்தால்

தமிழகத்தில் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி இரட்டிப்பாக வாய்ப்பு

தொழில்துறை, படிப்பு, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் மேம்படும்

உலகின் டான் யார்? என்ற போட்டியில் அமெரிக்கா, சீனா, ரஷ்யா இடையே கடுமையான போட்டி நிலவி வருகிறது. ஒரு காலத்தில் ராணுவம், மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் அமெரிக்காவின் ஆதிக்கம் உலகம் முழுவதும் பரவி அந்நாட்டின் டாலர் மதிப்பை உயர்த்தியது. இதனால், உலகில் பல்வேறு நாடுகளில் டாலரிலேயே வர்த்தகம் செய்யப்பட்டு வருகிறது. எஞ்சி உள்ள மற்ற நாடுகளிலும் டாலரிலேயே வர்த்தகம் செய்ய வைக்கும் முயற்சியில் அமெரிக்கா இறங்கி உள்ளது. இதற்காக ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ, ஜி-20, குவாட் போன்ற அமைப்பில் உள்ள நாடுகளை வளைத்து போட்டு தங்களது எதிரி நாடுகளை வீழ்த்த அமெரிக்கா ஆயத்தமாகி வருகிறது.

அமெரிக்காவுக்கு பரம எதிரியாக ரஷ்யா மற்றும் சீனா உள்ளது. அமெரிக்காவின் பலம் என்று அறியப்படும் ராணுவ துறையில் அந்நாட்டுக்கு இணையாக அதிநவீன ராணுவ உபகரணங்களை ரஷ்யா தயாரித்து இந்தியா, சீனா உள்ளிட்ட முக்கிய நாடுகளுக்கு குறைந்த விலையில் வர்த்தகம் செய்து வருகிறது. இதுதவிர, சீனா-ரஷ்யா இடையேயும், இந்தியா-ரஷ்யா இடையேயும் கச்சா எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு வர்த்தக ஒப்பந்தங்கள் போடப்பட்டு உள்ளது. இது, அமெரிக்காவுக்கு எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது. இதனால், ரஷ்யா மற்றும் சீனாவுக்கு குடைச்சல் கொடுக்க அதன் அண்டை நாடுகளான தைவான், உக்ரைன் உள்ளிட்ட நாடுகளுடன் நட்பு பாராட்டி, அவர்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து சீனா மற்றும் ரஷ்யாவை வீழ்த்த முடிவு செய்து உள்ளது.

அமெரிக்காவின் ராஜதந்திரத்தை முறியடிக்க பசிபிக் பிராந்தியத்தை கைப்பற்றி அமெரிக்காவுக்கு குடைச்சல் கொடுக்க சீனா திட்டமிட்டுள்ளது. இதற்காக, சாலமன் தீவு, கிரிபட்டி, சமோவா, பிஜி, டோன்ஹ்கா, வனுவாடு, பப்புவா நியூகினியா, குக் தீவுகள், கிழக்கு திமோர் மற்றும் பெடரேட்டட் ஸ்டேட்ஸ் ஆப் மைக்ரோனேஷியா ஆகிய 10 சிறிய பசிபிக் நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் சீனா இறங்கி உள்ளது. இந்த பிராந்தியத்துக்கு சீன அதிகாரிகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, பாதுகாப்பு முதல் மீன்வளம் வரை அனைத்தும் உள்ளடக்கிய பொதுவான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வருகின்றனர். இதேபொல், தெற்கு ஆசிய நாடுகளையும் வளைக்க மெகா திட்டத்தை சீனா போட்டு வருகிறது.

சாலமன் தீவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சீனா கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்படி, சாலமன் நாட்டிற்கு சீனா துருப்புகளை அனுப்பலாம் அல்லது ராணுவ தளத்தை கூட அமைக்கலாம் என்ற அச்சம் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டுள்ளது. சீனா உடனான ஆஸ்திரேலியாவின் உறவு சுமுகமானதாக இல்லாததால், அந்நாட்டிற்கான ஏற்றுமதி சிக்கல் நிறைந்ததாக உள்ளது. இதனால், தனது உற்பத்தியை இந்தியா மற்றும் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்ய ஆஸ்திரேலியா திட்டமிட்டது. இதன் வெளிப்பாடே இந்திய-ஆஸ்திரேலிய வர்த்தக ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆஸ்திரேலியா பார்க்கிறது.

இந்தியா-ஆஸ்திரேலியா இடையே பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் கடந்த ஆண்டு நவம்பர் 21ம் தேதி அங்கீகரிக்கப்பட்டு டிசம்பர் 29ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது. இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே முறையான வர்த்தகத்தை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும் போடப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் ஆஸ்திரேலியாவின் பொருட்கள் மலிவான விலையில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் இந்திய ஆசிரியர்கள், சமையல் கலைஞர்கள் வருடாந்திர விசா ஒதுக்கீட்டின் மூலம் ஆஸ்திரேலியா செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் 1லட்சத்திற்கும் அதிகமான இந்திய மாணவர்கள் கல்வி விசா மூலம் ஆஸ்திரேலியா கல்வி நிறுவனங்களில் சேர முடியும்.

இந்தியாவில் விவசாய பொருட்கள், ஆட்டோமொபைல் சாதனங்கள், நகைகள், ஜவுளி, தோல், பர்னிச்சர் என பல்வேறு துறைகள் இந்த ஒப்பந்தத்தினால் பயனடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தால் தமிழக சந்தையில் உள்ள சீன பொருட்களின் ஆதிக்கம் குறையும். படிப்பு, வேலை வாய்ப்பு மேம்படும். திருப்பூரில் அண்மைக்காலமாக பல்வேறு காரணங்களினால் ஜவுளி உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனங்கள் தடுமாறி வருகின்றன.

இந்தியா-ஆஸ்திரேலியா ஒப்பந்தம் மூலம் திருப்பூரில் உள்ள ஜவுளி நிறுவனங்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜவுளி நிறுவனங்களும் அதை சார்ந்த 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜாப் ஆர்டர்கள் நிறுவனங்களும் திருப்பூரில் உள்ளன. இதே போல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இது போன்ற நிறுவனங்கள் உள்ளன. இந்த ஒப்பந்தம் மூலம் ஜவுளி நிறுவனங்கள் பெரிதளவில் பயன்பெற வாய்ப்புள்ளது. இதனால், தொழில்துறையினர் உற்சாகம் அடைந்துள்ளனர்.

கல்வி துறையில் தமிழகம், இந்தியாவுக்கே முன்னோடியாக உள்ளது. இந்தியா-ஆஸ்திரேலியா வர்த்தக ஒப்பந்தம் மூலம் இந்திய மாணவர்கள் அங்கு படிக்க அதிக அளவில் செல்ல முடியும். அதேபோல், ஆஸ்திரேலியாவில் இருந்தும் இந்தியாவிற்கும் மாணவர்கள் படிக்க வருவது அதிகரிக்கும். வேலை வாய்ப்புக்காகவும் ஆஸ்திரேலியா செல்வதும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து எஸ்என்எஸ் கல்வி நிறுவனங்களின் தொழில்நுட்ப இயக்குநர் நளின் விமல்குமார் கூறுகையில், 'இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கு இடையிலான வணிக வாய்ப்புகளை மேம்படுத்தும். இது தொழில் துறையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும். இறுதியில் திறமைகளின் தேவை உயரும். இதனால் வேலைவாய்ப்புகள் மேம்படும்' என்றார்.

இந்திய ஜவுளி தொழில்முனைவோர்கள் கூட்டமைப்பின் தலைவர் பிரபு தாமோதரன் கூறுகையில், "ஆஸ்திரேலியா ஒரு வருடத்தில் சுமார் 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் ஆயத்த ஆடைகளை இறக்குமதி செய்கிறது. சீனா ஏறத்தாழ 63 சதவீதம் சந்தையை வைத்துள்ளது. இந்தியா 5 சதவீதம் சந்தையை இதுவரை கைப்பற்றியுள்ளது. 7 மாதத்தில் சுமார் ₹1,600 கோடி வரையிலான ஆயத்த ஆடைகளை நாம் ஏற்றுமதி செய்திருக்கிறோம். இந்த வர்த்தக ஒப்பந்தத்தினால் நமக்கு வரியில்லா சலுகை ஏற்றுமதிக்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. அது மட்டுமல்லாமல் சீனாவிடம் ஆடைகளை வாங்குவதை குறைத்து வேறு நாடுகளில் வாங்க வேண்டும் என்ற ஆர்வமும் அங்கு நிலவுவதால் நமது தமிழக ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனங்கள் தொடர் முயற்சி எடுக்கும் பட்சத்தில் தற்போதுள்ள ஏற்றுமதியை இரட்டிப்பாக்க முடியும்' என்றார்.

₹4.10 லட்சம் கோடி வணிகம்

இந்திய-ஆஸ்திரேலியா வர்த்தக ஒப்பந்தம் மூலம் இரு நாடு வணிகமும் 27 பில்லியன் டாலர்களில் (2.20 லட்சம் கோடி) இருந்து 45-50 (4.10 லட்சம் கோடி) பில்லியன் டாலராக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

85% வரி நீக்கம்

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தக ஒப்பந்தந்தை தொடர்ந்து ஆஸ்திரேலியாவில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் கம்பளி, ஆட்டுக்குட்டி, பார்லி, ஓட்ஸ், நண்டுகள், அழகு சாதன பொருட்கள், தாதுக்கள், இரும்பு, டைட்டானியம் டையாக்சைடு உள்ளிட்ட பல பொருட்களுக்கு 85 சதவீதத்திற்கும் மேலான வரிகள் நீக்கப்பட்டுள்ளது. நட்ஸ், வெண்ணெய், பெர்ரி, கடல் உணவுகள், மருந்துகள், கோக்லியர் இம்ப்லாண்ட்ஸ், வைட்டமின்கள், குழந்தைகளுக்கான பொருட்கள், காலை உணவு தானியங்கள், பாஸ்தா, சந்தன சிப்கள், பம்புகள் மற்றும் பில்லர்கள், இயந்திர பாகங்கள். சுரங்கம் சம்பந்தமான இயந்திரங்கள் என பலவற்றிற்கும் படிப்படியாக வரி குறைக்கப்பட உள்ளன. ஆஸ்திரேலியாவும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் பலவற்றுக்கு வரி சலுகைகளை வழங்கியுள்ளது.

குறுந்தொழில் ஊக்குவிக்கப்படுமா?

தமிழ்நாடு கைத்தொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்கள் சங்க கோவை மாவட்ட தலைவர் ஜேம்ஸ் கூறுகையில், 'இந்த ஒப்பந்தம் மூலம் தொழில்கள் வளர்ச்சியடைந்தால் சந்தோஷம். அதே சமயம் ஆட்டோமொபைல் சாதனங்கள் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி ஆவது மிகவும் குறைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் சீனாவில் குறைந்த விலையில் கிடைப்பதே. இந்தியாவில் ஜாப் ஆர்டர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய விலைகள் கிடைப்பது இல்லை. குறுந்தொழில் முனைவோர்கள் ஊக்குவிக்கப்படாமல் விலை குறைய வாய்ப்பு இல்லை. ஒன்றிய, மாநில அரசுகள் தேவையான நடவடிக் கைகளை எடுத்தால் மட்டுமே இந்த ஒப்பந்தங்கள் மூலம் சிறு, குறுந்தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியடையும்' என்றார்.



கோவை பம்புசெட்டுக்கு கிராக்கி

கோவை மாவட்ட பம்புசெட் மற்றும் உதிரிபாகங்கள் தயாரிப்பாளர் சங்க (கோப்மா) தலைவர் மணிராஜ் கூறியதாவது: கோவையில் பம்புசெட் மற்றும் உதிரிபாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்களின் பொருட்கள் இந்தியா முழுவதும் விற்பனையாகின்றன. பம்புசெட் உற்பத்தியில் இந்தியாவுக்கே சிறந்த மார்க்கெட்டாக கோவை உள்ளது. உலக அளவில் கோவை பம்பு செட்கள் பெயர் பெற்றுள்ளன. வளைகுடா நாடுகளில் கோவை பம்புசெட்கள் தேவை அதிகரித்து வருகிறது. ஏற்றுமதியை எவ்வாறு எப்படி மேற்கொள்ள வேண்டும் என்கிற விவரம் பெரும்பாலும் எங்களை போன்ற சிறு நிறுவனங்களுக்கு தெரிவதில்லை. இந்தியா ஆஸ்திரேலியா ஒப்பந்தப்படி கோவையில் இருந்து பம்புசெட்களை ஏற்றுமதி செய்ய முயற்சி செய்யலாம். ஏற்றுமதி தொடர்பாக ஒன்றிய அரசு வழிகாட்டு குழுக்களை அமைக்க வேண்டும். அவர்களை அணுகினால் பணம் செலுத்தி ஏற்றுமதி தொடர்பாக வகுப்புகளுக்கு வரசொல்கின்றனர். அதற்கு பதிலாக குழு அமைத்து எங்களை வழிநடத்தலாம். இவ்வாறு அவர் கூறினார்.

சீனா ஆதிக்கம் குறையுமா?

- சீனாவுடன் இந்தியாவின் வர்த்தகம் 11%. ஆஸ்திரேலியாவுடன் இந்தியாவின் வர்த்தகம் 2%.
- 2020-21ம் நிதியாண்டில் இந்தியா-சீனாவின் ஏற்றுமதி வர்த்தகம் ₹1.57 லட்சம் கோடி. இறக்குமதி வர்த்தகம் ₹7.09 லட்சம் கோடி
- இந்தியா எல்லையில் சீனா தொடர்ந்து அத்துமீறி வருவதால், அவர்களின் பொருளாதாரத்தை முடக்கும் வகையில், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தக்கத்தை நிறுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.
- சீனாவுக்கு எதிரான மன நிலை இருப்பதாக ஒன்றிய அரசு காட்டி கொண்டு, அந்நாட்டு நிறுவனங்களில் அதிரடி ரெய்டு நடத்தி சட்டவிரோத பணப்பரிவர்த்தனையை முடக்கினாலும், அந்நாட்டுடனான வர்த்தகம் மட்டுமே ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து கொண்டே போகிறது.
- இந்தியா - ஆஸ்திரேலியா ஒப்பந்தம் மூலம் சீனாவின் இறக்குமதி வர்த்தகம் குறையும் என்று கூறப்படுகிறது. ஆனால், எந்தளவுக்கு குறையும் என்று கணிக்கப்படவில்லை.

100% வரி விலக்குடன் பிரிட்டனுக்கு ஏற்றுமதி

ஆஸ்திரேலியா - பிரிட்டன் இடையேயான முந்தைய ஒப்பந்தத்தின் கீழ், ஆஸ்திரேலியாவின் 99% பொருட்களை அந்நாடு வரி இன்றி பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்த ஒப்பந்தம் முழுமையடையும்போது 100 சதவீத பொருட்கள் வரிவிலக்கு பெறும். பிரிட்டனுக்கு ஆட்டு இறைச்சி, மாட்டிறைச்சி, பால் பொருட்கள், சர்க்கரை, ஒயின் உள்ளிட்ட பொருட்களை ஆஸ்திரேலியா ஏற்றுமதி செய்து வருகிறது.

ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளில்

465 தற்காலிக ஆசிரியர்கள் 20ம் தேதிக்குள் நியமனம்

இயக்குநர் உத்தரவு

வேலூர், ஜன.11: *தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1400க்கும் மேற்பட்ட தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை, பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர் பணியிடங்களை பதவி உயர்வு மூலமும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

இதற்கு காலதாமதம் ஆவதால் மாணவர்கள் நலன் கருதி தொகுப்பூதிய அடிப்படையில் தற்காலிக ஆசிரியர்களை நியமனம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் ஆனந்த், அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: ஆதி திராவிடர் நலத்துறை பள்ளிகளில் 19 முதுநிலை ஆசிரியர்கள், 80 பட்டதாரி ஆசிரியர்கள், 366 இடைநிலை ஆசிரியர்கள் என மொத்தம் 465 பணியிடங்கள் காலியாக உள்ளன. இவற்றில் நிரந்தர ஆசிரியர்கள் நியமிக்கப்படும் வரை, பள்ளி மேலாண்மை குழு வழியே, தற்காலிக ஆசிரியர்களை நியமித்து கொள்ளலாம்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் நேரடியாகவோ, தபால் வழியிலோ உரிய கல்வி சான்றுகளுடன், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை பரிசீலித்து, சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியருக்கு, மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அனுப்ப வேண்டும். பின்பு, பள்ளி மேலாண்மை குழு வழியே, தற்காலிக ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். இந்த பணிகளை வரும் 20ம் தேதிக்குள் முடிக்க வேண்டும். இடைநிலை ஆசிரியர்கள் பதவிக்கு ₹7,500, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ₹10 ஆயிரம் மற்றும் முதுநிலை ஆசிரியர்களுக்கு ₹12 ஆயிரம் மாத சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பாமக பிரமுகர் சரமாரி வெட்டிக்கொலை

கும்பகோணம், ஜன.11: *தஞ்சாவூர் அருகே நிலத்தகராறில் பாமக பிரமுகரை சரமாரி வெட்டிக் கொன்ற தந்தை, மகனை போலீசார் தேடி வருகின்றனர்.*

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே மேலானமேடு கிராமத்தை சேர்ந்தவர் திருஞானசம்பந்தம் (53). விவசாயியான இவர், பாமக முன்னாள் பேரூர் நகரத்தலைவர். இவரது மனைவி வனிதா (42). இவர்களுக்கு ஸ்ரீராம் (25) என்ற மகனும், ஸ்ரீமதி (22) என்ற மகளும் உள்ளனர். இந்நிலையில் திருஞானசம்பந்தத்திற்கும், இவரது வீட்டின் அருகே வசிக்கும் ராஜேந்திரன் (55) என்பவருக்கும் நிலத்தகராறில் கடந்த 15 வருடங்களாக முன் விரோதம் இருந்துள்ளது. இதுதொடர்பாக, சில மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட தகராறில் திருஞானசம்பந்தத்தை ராஜேந்திரன் மற்றும் அவரது குடும்பத்தினர் சேர்ந்து தாக்கியுள்ளனர். இது தொடர்பாக சோழபுரம் போலீசார் வழக்கு பதிந்து ராஜேந்திரன், அவரது மகன் மணிகண்டனை (21) கைது செய்தனர். தற்போது நிபந்தனை ஜாமீனில் வெளியே வந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று மண்ணியாற்றங்கரை இரட்டைப்பாலம் அருகே பைக்கில் வீட்டிற்கு சென்ற திருஞானசம்பந்தத்தை வழிமறித்த ராஜேந்திரன், மணிகண்டன் ஆகியோர் அரிவாளால் சரமாரியாக வெட்டிவிட்டு தப்பினர். இதில் ரத்த வெள்ளத்தில் துடித்த திருஞானசம்பந்தத்தை அப்பகுதியினர் மீட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள், அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். குற்றவாளிகளை கைது செய்ய வலியுறுத்தி மருத்துவமனை வாயிலிலும், சோழபுரம் கடைத்தெருவிலும் உறவினர்கள், நண்பர்கள் மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்த சோழபுரம் போலீசார் அவர்களை சமரசம் செய்து அனுப்பினர். இதுதொடர்பாக வழக்கு பதிந்து தந்தை, மகனை தேடி வருகின்றனர்.

பாஜ நிர்வாகிகள் அடிதடி

தேனி, ஜன. 11: *தேனி நகரில் குடியிருப்பவர் மதிவாணன் (34), தேனி நகர பாஜ தலைவர். அதே பகுதியை சேர்ந்த பெரியசாமி (40) துணைத் தலைவராக உள்ளார். இருவரது மனைவியும் உறவினர்கள். இந்நிலையில் பெரியசாமியின் தவறான பழக்கங்கள் குறித்து அவரது மனைவியிடம் மதிவாணன் குடும்பத்தினர், தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக இருதரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் முற்றி அடிதடி ஏற்பட்டது. இது குறித்து இருதரப்பும் அளித்த புகாரில் 7 பேர் மீது வழக்குப்பதிவு செய்து உள்ளனர்.*

முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்

muthoot HOUSING FINANCE

பதிவு அலுவலகம்: TC எண் 14/2074-7, முத்தூட் மையம், புன்னேன் சாலை, திருவனந்தபுரம்-695 034,
கார்பரேட் அலுவலகம்: 12/A 01, 13வது தளம், பரினீ கிரெஸ்சென்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்-G பிளாக் (கிழக்கு), மும்பை-400051, மின்னஞ்சல் முகவரி: authorised.officer@muthoot.com

கோரிக்கை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் பிரிவு 13(2) கீழ்

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் ("MHFCL") அதிகாரப்பூர்வ அதிகாரி ஆவார் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்புகள் வழங்கி, பின்வரும் கடன்தாரர்(கள்), உப-கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர் உங்களுக்கு வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் மேலும் மாற்று பட்டுவாடாவாக மற்றும் வழியில் கீழே கொடுக்கப்பட்டவாறு அறிவிப்பு பிரசுரத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நாளது தேதிய வட்டி, செலவு மற்றும் கட்டணங்கள் உட்பட முழு நிலுவைத்தொகையைச் செலுத்தி நிறுவனத்திற்குரிய தங்கள் முழு கடன் பொறுப்பைத் தீர்க்குமாறுக் கோருகிறார். கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கடனீடாக, பின்வரும் கடனீட்டுச் சொத்து(கள்) முறையே மேற்கூறிய கடன்தாரர்(கள்), உப-கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மூலம் முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

வ. எண்	கடன்தாரர்/உப-கடன்தாரர்/ஜாமீன்தாரர் பெயர்	செயல்படா சொத்து நாள்	கோரிக்கை அறிவிப்பு நாள்	மொத்த நிலுவைத்தொகை
1	க.க.எண். 11110074827 1.யுவராஜ் D தேவன், 2.ஜெயலட்சுமி.K தேவன், 3.மல்லிகா கே தேவன் என்ற மல்லிகா. D	31-மே-2021	03-ஜனவரி-2022	19-டிசம்பர்-2022 தேதி அன்று ரூ.12,12,066/- (ரூபாய் பன்னிரெண்டு லட்சம் பன்னிரண்டாயிரம் அறுபத்தி ஆறு மட்டும்)
	பாதுகாக்கப்பட்ட சொத்து (கள்) / அசையாச் சொத்து (கள்) பற்றிய விளக்கம்: 572 சதுர அடி பரப்பளவு (பொது பாதை உட்பட) சர்வே எண் 313 பகுதி, மற்றும் கட்டிடம் தாங்கும் கதவு எண்.6/3, ரெட்ஹில்ஸ் சாலை, பத்மநாபன் தெரு, சென்னை 600 049, கொன்னூர் கிராமத்தில் அமைந்துள்ளது, பெரம்பூர் - புரசவாக்கம் தாலுக்கா, சென்னை மாவட்டம் சென்னை மாநகராட்சி, 416 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பகுதி. அடி.., மற்றும் எல்லை:- வடக்கு: 4 அடி பொதுவான பாதை, தெற்கு: சாலை, கிழக்கு வழியாக: திருமதி. பி.மகேஸ்வரிக்கு சொந்தமான சொத்து, மேற்கு மூலம்: திரு. குப்புசாமி நாயுடுவுக்கு சொந்தமான வீடு, அளவீடு, கிழக்கிலிருந்து மேற்கு வடக்குப் பக்கம் - 16 அடி, தெற்குப் பக்கம் - 16 அடி, வடக்கிலிருந்து தெற்கே கிழக்குப் பக்கத்தில் - 26 அடி, மேற்குப் பக்கம் - 26 அடி, உள்ளே கொன்னூரின் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை வடக்குப் பதிவு மாவட்டம்.			

மேற்கூறிய கடன்தாரர், உப-கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) மேற்கூறியவாறு முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்கு தொகையை செலுத்தத் தவறினால், முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட் மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை சுவாதீனம் செய்யும் உரிமை பெறும் மேலும் முற்றிலும் கடன்தாரர்களின் முழு பொறுப்புகள், செலவு மற்றும் விளைவுகளில், சட்டத்தில் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறுமாறு இவ்வித பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மேற்கூறிய கடன்தாரர்(கள்), உப-கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர் முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் முன்கூட்டிய ஒப்புதலின்றி அறிவிப்பில் குறிப்பிட்ட மேற்கூறிய கடனீட்டுச் சொத்தினை(களை) விற்பனை, குத்தகை அல்லது பிற வழியில் பெயர்மாற்றம் செய்வதற்கு பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் பிரிவு 13 இன் உட் பிரிவு (13) விதிகளின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இடம்: சென்னை , நாள்: ஜனவரி 11 , 2023

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்காக

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டரக்சன் பிரைவேட் லிமிடெட்

OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.

CIN: U67100TZ2014PTC020363 **கார்பரேட் அலுவலகம்:** C-515, கானாக்கியா ஸில்லியான், எல்.பி.எஸ். சாலை மற்றும் சி.எஸ்.டி. சாலை சந்திப்பு, பிகேசி அனெக்ஸ், குர்லா (மேற்கு), மும்பை-400 070
மின்னஞ்சல்: mumbai@omkaraarc.com | **தொலைபேசி:** 022-26544000 **அதிகாரப்பூர்வ அதிகாரி** கைபேசி எண்: +91 98840 62068 / +91 81481 07201

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) மற்றும் 9(1) விதிமுறைகளை காண்க]

அசையாச் சொத்து மின்-ஏலம் விற்பனை பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 (6) மற்றும் 9(1) விதிமுறைகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சர்பாசி சட்டம்") கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, புல்லர்டான் இந்தியா வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் (எப்ஐஎச்எப்சிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது மின்-ஏலம் மூலம் விற்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டரக்சன் பி லிட் (ஓஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 22/2020-21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது) உரிமையீந்தோர் நிறுவனத்திடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் புல்லர்டான் இந்தியா வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட் (உரிமையீந்தோர் வங்கி) வசமிருந்து 26.02.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் கீழ்க்காணும் கணக்குகளின் முழு கடன் நிலுவைகளை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஓஏஆர்பிஎல் உரிமையீந்தோர் நிறுவனத்தின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீடுகளை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஓஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழே குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்ய எண்ணுகிறார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப-கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டு கடனீந்தோராக ஓஏஆர்பிஎல்-க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக, சொத்தானது சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் அதிகாரங்களைப் பயன்படுத்தி; **"உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு"**, மேலும் **"உள்ளது எதுவோ அது"** மற்றும் **"முறையீடுசாரா அடிப்படை"**யில் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஏனைய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ. எண்	கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் பெயர்	சொத்து விவரம்/ சொத்து உரிமையாளர்	சொத்து உரிமை யாளர்	31.12.2022 தேதியன்று நிலுவைத் தொகைகள்	கோரிக்கை அறிவிப்பு நாள் சுவாதீனம் நாள்	நிர்ணய விலை ஏலம் உயர்த்தும் தொகை	முன்வைப்புத்தொகை பார்வையிடும் நாள் & நேரம்
1.	1. லில்லி B 2. பாலசுப்ரமணி S 3. விஷால் டெய்லர்	திருவள்ளூர் பதிவு மாவட்டம் மற்றும் சார் பதிவு மாவட்டத்திற்குள் பழைய எண் 156, புதிய எண் 77, தண்டலம் கிராமம், வீரராகவபுரம் ஊராட்சி திருவள்ளூர் வட்டம் மற்றும் மாவட்டத்தில் அமைந்துள்ள சர்வே எண் 81/2 இல் அடங்கிய 07.01.2011 தேதியிட்ட அவர்தம் மேற்கோள் கடிதம் 5528/2010 மூலம், LP/DDTCP No.19/2011, துணை இயக்குனர் நகர் மற்றும் நாடு திட்டமிடல் செங்கல்பட்டு பிராந்தியம் அவர்களால் அனுமதிக்கப்பட்ட "நவநி பாரடைஸ்" என்ற அனுமதிபெற்ற மனைப்பிரிவில் சர்வே எண் 81/2 இல் அடங்கிய மனை எண் 39 A விஸ்தீரணம் 750 சதுரடி (DDTCP திட்டப்படி மனை எண் 39 ஆனது மனை எண் 39 மற்றும் 39A ஆக சார் பிரிக்கப்பட்டது, சார் பிரிவு ஆனது உள்ளாட்சி அமைப்பால் அனுமதி பெற்றது) சார் பிரிக்கப்பட்ட காலி வீட்டு மனையின் அனைத்து துண்டு மற்றும் பகுதி மேலும் **எல்லைகள்:** வடக்கில்: மனை எண் 40, தெற்கில்: மனை எண் 39, கிழக்கில்: 30 அடி சாலை, மேற்கில்: மனை எண் 30. விஸ்தீரணம், கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 50 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 15 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 15 அடி அனைத்தும் விஸ்தீரணம் மொத்தப் பரப்பளவு 750 சதுரடி மேலும் அதிலான முடிக்கப்படாத கட்டிடம்.	லில்லி B	₹14,68,394/- (ரூபாய் பதினான்கு இலட்சத்து அறுபத்தெட்டு ஆயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்)	06.06.2019 26.08.2019 (கையக)	₹3,75,000 (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தைந்து ஆயிரம் மட்டும் ₹10,000/- (பத்தாயிரம்)	₹37,500/- (முப்பத்தேழு ஆயிரத்து ஐநூறு மட்டும்) 06.02.2023 (காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை)

கணக்கு எண்: 344905000929, **பயனாளி பெயர்:** ஓம்காரா பிஎஸ் 22/2020-21 பொறுப்பாட்சி, **வங்கி பெயர்:** ஐசிஐசிஐ வங்கி, **கிளை:** பாந்த்ரா (கி), மும்பை, **IFSC குறியீடு:** ICIC0003449

மின்-ஏலம் நாள் & நேரம்	செவ்வாய்க்கிழமை 13.02.2023 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்	10.02.2023 மாலை 4.00 மணிக்குள்

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டு கடனீந்தோர் (ஓஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குனர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 01.01.2023 முதல் மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்-ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டு கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

நாள்: 09.01.2023
இடம்: சென்னை

(இராஜேஷ் B ஜுமானி) அதிகாரப்பூர்வ அதிகாரி, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டரக்சன் பி. லிட்.
(ஓம்காரா பிஎஸ் 22/2020-21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)